போர்ச்சுகல் சர்க்கார் குருட்டுத்தனம்

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் : அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. The Official Organ Of The D.P.F.

தனி இதழ் : ஒரு அணு இலங்கையில் 10 சதம்	சென்னை : ஆனி மீ 5உ வெளியூர் : ஆனி மீ 6உ	சனி (19—6—54) ஞாயிறு (20—6—54)	மலர் : 2 இதழ் : 5

கோவா தென்னிந்தியர் அனைவரும் கம்யூனிஸ்டாம்

கல்வி நிலையங்களில் உள்ள திராவிடரை வெளியேற்ற சூழ்ச்சி!

கோவாவில் உள்ள போர்ச்சுகீசிய இந்திய சர்க்கார், அங்கு கல்வி நிலையங்களிலுள்ள தென்னாட்டு—திராவிட அலுவலாளர்கள் அனைவரையும் 'கம்யூனிஸ்டுகள்' எனப் பழி சுமத்தி, வெளியேற்றிவிட கட்டளை பிறப்பித்திருக்கிறது.

'கடுகு சிறுத்தாலும் காரம் போவதில்லை' என்பார்கள். இதைப்போலவே, எவ்வளவு உருவத்தில் சிறிதாக இருந்த போதிலும் போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியத்திற்கு ஆணவத்தில்மட்டும் குறைவில்லை.

கோவாவில், கல்வி நிலையங்களில், தென்னிந்தியர்—திராவிடர் பல துறைகளில் பணி புரிந்து வருகின்றனர். அவர்கள் அனைவரையும் வெளியேற்றிவிட வேண்டுமென அங்கு எதேச்சாதிகார ஆட்சி புரிந்து வரும் போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியம் முடிவுக்கு வந்திருக்கிறது.

அவர்களை வெளியேற்ற ஏதாவது ஒரு காரணத்தைக் குறிப்பிட வேண்டியது அவசியமென, அந்த ஏகாதிபத்தியம் கருதியது. உடனே அங்கு கல்வி நிலையங்களில் இருக்கும் 'தென்னிந்தியர்கள்' அனைவரும் 'கம்யூனிஸ்டுகள்' எனும் கற்பனைக் கதையைக் கட்டிவிட்டு இருக்கிறது.

பத்து ஆண்டுகட்குக் குறைவாகப் பணி புரிந்து வருகிறவர்களாக இருக்கும் அந்தக் 'கம்யூனிஸ்டு'களை எல்லாம் உடனடியாக வெளியேற்றிவிட உத்தரவு போட்டிருக்கிறது கோவா அரசாங்கம்.

அப்படி காலியாகிற இடங்களை எல்லாம் ஏகாதிபத்தியத்திற்கு எடுபிடியாக இருக்கிறவர்களைக் கொண்டு நிரப்பிக்கொள்வது எனவும் சர்க்கார் தீர்மானித்திருக்கிறதாம்!

இதேநேரத்தில், போர்ச்சுகீசு இந்தியாவை பலப்படுத்திக் கொள்வதற்காக, இராணுவங்களைப் பெருக்கியும் வருகிறது. இத்துறையில், துருப்புகளை ஏற்றி வரும் 'டிமோர்' என்ற கப்பல் எதிர்பார்க்கப்படுகிறது.

பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல்

செல்லாது என தேர்தல் கமிஷனர் தீர்ப்பு

தோற்றவருக்குப் பதவி!

இராணிப்பேட்டை பஞ்சாயத்து போர்டு தலைவராக எம். ரங்கசாமி தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று தேர்தல் கமிஷனரான ஜில்லா முனிசிப் தாத்தாச்சாரியார் தீர்ப்பளித்தார்.

முன்பு தலைவர் தேர்தலில் தோற்றுப்போனதாக அறிவிக்கப்பட்ட டி. துரைசாமி, பஞ்சாயத்து போர்டின் தலைவர் என்று அவர் அறிவித்தார்.

19 வோட்டுகள் வித்தியாசத்தில் ரங்கசாமி வெற்றி பெற்றார் எனமுன்னர் அறிவிக்கப்பட்டது.

தமிழர் போராட்டத்தை ஒடுக்க முயற்சி

திரு-கொச்சியில் அடக்குமுறை

பெண்கள் உட்பட பலர் கைது

மூணார், ஜூன் 18—

திருவாங்கூர் - கோச்சியைச் சேர்ந்த தேவிகுளம் தாலுகாவில் தமிழர்கள் போலீசாரால் கொடுமைப்படுத்தப்படுகின்றனர் என்று தெரிகிறது.

திருவாங்கூர் தமிழ்ப் பகுதிகளை தமிழ் நாட்டுடன் இணைக்கக் கோரிய தொழிலாளர் தலைவர்கள் கடுமையாகப் போலீசாரால் தாக்கப்பட்டனராம்.

மூணாரில் தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவரான வி. சுப்பையாவும் காரியதரிசி சுப்பையாவும் கைது செய்யப்பட்டு, வீதிகளில் விலங்கிட்டு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று தெரிகிறது.

தலையார் தோட்டத்தில் வேலை செய்யும் 56 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது. இவர்களில் 9 பேர் பெண்கள்.

கைக்குழந்தைகளுடனிருந்த இப்பெண்கள் உட்பட அனைவரையும் போலீசார் 76 மைலுக்கப்பாலுள்ள தொடுபுழைக்கு அழைத்துச் சென்றார்களாம்.

'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை அடக்கவே திரு-கொச்சி சர்க்கார் இந்த அடக்குமுறைகளைக் கையாளுகின்றனர் என்றும், தமிழ் நாட்டில் உள்ள மக்கள் திருவாங்கூர் தமிழர்களின் போக்கை ஆதரிக்க வேண்டுமென்றும் திரு—தமிழ்நாடு காங்கிரஸ் காரியதரிசி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆண்டொன்றுக்கு 50,000 பேர் பலி

புற்றுநோய் சிகிச்சைசாலை திறப்பு விழா

சென்னை, ஜூன் 18—

"ஆண்டுதோறும் இந்தியாவில் 50 ஆயிரம் பேர் புற்று நோயினால் மரணமடைகின்றனர்," என்று அடையாறு புற்றுநோய் வைத்தியசாலையின் தலைவர் டாக்டர் அருணாசலம் வைத்தியசாலையின் திறப்பு விழாவில் கூறினார்.

விழாவிற்கு சென்னை சுகாதார அமைச்சர் ஓ. பி. ஷெட்டி தலைமை தாங்கினார். இந்திய சர்க்கார் நிதி அமைச்சர் தேஷ்முக் புற்றுநோய் வைத்தியசாலையைத் திறந்து வைத்தார்.

'தினத் தந்தி' நிருபரின் திருவிளையாடல்!

ரூ. 3 அபராதம் கட்ட வைத்தது

தூத்துக்குடி, ஜூன் 19—

மேற்படி ஊரில் 9—5—54-ல் சந்தன மாரியம்மன் கோயில் பக்கத்தில் ஒரு காங்கிரஸ் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தானும் பேச வேண்டுமென, கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவரும், 'தினத் தந்தி' பத்திரிகையின் நிருபராகவும் உள்ள சுடலைமுத்து, கூட்டத் தலைவருக்கு சீட்டு அனுப்பினார்.

கோரிக்கையை தலைவர் மறுத்து விடவே, மேற்படி சுடலைமுத்து கூட்டத்தில் ஆர்ப்பாட்டம் செய்ய முனைந்தார் என வடபாகம் போலீசார் நியூசன்ஸ் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடுத்தனர்.

வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட், 'தினத் தந்தி' நிருபர் குற்றஞ் செய்திருப்பதாகத் தீர்மானித்து, ரூ. 3 அபராதம் விதித்தார்.

தம்பிரானின் சைக்கிள் சவாரி!

தூத்துக்குடி முத்தையாபட்டினத்தில் உள்ள அருணகிரிக் கழகத்தின் ஆண்டு விழாவில் கலந்து கொள்ள குன்றக்குடி மடாதிபதி சைக்கிளில் சென்றார் என்று தெரிகிறது.

அவரது கார், பிரசாரத்துக்குச் சென்று விட்டதாலும், குறித்த நேரத்தில் வராததாலும் மடாதிபதி சைக்கிளில் சென்றாராம்.

தொழில் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் முறைக்கு பி. டி. ராஜன் ஆதரவு

ஆச்சாரியார் எதிர்ப்பை அம்பலமாக்குகிறார்

"மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்துறைக் கல்லூரிகளில், மாணவர்கள் சேர்க்கை விதியில் செய்யப்பட்டுள்ள புதிய மாறுதலை ஏதாவது உள்நோக்குடன் எதிர்ப்பவர்கள் நீதி, நேர்மை குறித்துச் சற்றும் கவலை கொள்ளாதவர்கள் என்பதுடன் புதிய மாறுதலை எதிர்ப்பதின்மூலம், இந்த மாநில மக்களுக்கு மாபெரும் துரோகம் விளைவித்தவர்களும் ஆவார்கள்."

"ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில், டாக்டர் லட்சுமணசாமி போன்ற கல்வி நிபுணரின் தலைமையில், மாநிலத்தில் உள்ள எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளையும் கொண்ட குழு ஒன்று கல்விப் பிரச்சினையை ஆராய்ந்து நல்லதொரு திட்டத்தை உருவாக்க வேண்டும்."

—இவ்வாறு, திரு. பி. டி. ராஜன், சோழவந்தானில், ஏராளமான கூட்டமொன்றில் பேசுகையில் கருத்தறிவித்தார்.

அவர் தொழிற் கல்லூரி மாணவர் சேர்க்கை விதிமுறை மாற்றம் குறித்து மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"புதிய மாறுதல், பலவித நிர்ப்பந்தங்கள் உண்டாக வழி ஏற்படும் என்றும், இளைஞர்களிடையே பெரும் சந்தேகத்தையும் தயரத்தையும் உண்டாக்கக் காரணமாயிருக்கு மென்றும் முன்னாள் முதல்வர் ஆச்சாரியார் கூறுவதை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை. "நீயும் வாழ பிறரையும் வாழவிடு" என்ற கொள்கையை ஒரு சமூகம் மனப்பூர்வமாக நம்புமானால் ஏன் அவர்களிடத்தில் துன்பமும் துயரமும் தலைகாட்டப் போகின்றன?"

"இந்தப் புதிய மாறுதல்கள் அரசியல் சட்டத்திற்கு முரணானவை என்று கூறப்படுமானால், அது நாட்டில், மனக் கசப்பையும் வேற்றுமையையும் தான் உண்டாக்கும்" என்று குறிப்பிட்டார்.

"தமிழ் ஆட்சி மொழி ஆக வேண்டுமெனபவர்கள் அவசரப்படலாகாது. இயற்கையாக தானாகவே, இந்த ஆட்சி மொழி மாற்றம் ஏற்பட வேண்டும்" என்றார்.

மத்திய சர்க்கார் கடன்

இராமநாதபுரம் இராஜா ரூ. 50,000 கோருகிறார்

மத்திய சர்க்கார் திட்டத்தின் கீழ் தேசியக் கடனுக்கு சென்னை மராமத்து இலாகா அமைச்சர் இராமநாதபுரம் இராஜா ரூ. 50,000 கொடுத்திருக்கிறார் என்று தெரிகிறது.

மது போதையில் அரிவாள் ஏந்திய இளைஞர் காங்கிரசார்!

ஆறு பேர் மீது போலீஸ் வழக்கு!

(நமது நிருபர்)

கோவில்பட்டி, ஜூன் 19—

6—6—54-ல் தி. மு. கழகக் கொடியைக் காங்கிரஸ் காலிகள் அகற்றிவிட்ட பின்பு, 9—6—54 மாலை 4-மணியளவில் மீண்டும் பஸ் ஸ்டாண்டிற்குமுன் அதே இடத்தில் கழகத் தோழர்கள் ஒரு கொடிக்கம்பத்தை நாட்டினர். நான்கு நாட்களுக்குப் பின் 13—6—54 இரவு 2-30-மணியளவில் இளைஞர் காங்கிரசினர், சில வெளியூர் காலிகளுடன் கொடிக் கம்பத்தினருகில் சென்று அரிவாளால் கம்பத்தை வெட்டி, கீழே சாய்த்துக்கொடியைக் கொளுத்தினர். இந்தச் செய்தியை உடனே தெரிந்த தி. மு. கழகத் தோழர்கள் விரைவாகப் போலீசுக்குத் தகவல் கொடுத்தனர். சில போலீஸ் சிப்பாய்கள் பஸ் ஸ்டாண்டிற்குச்சென்றனர். அந்த இடத்தில் கொடியை வெட்டிய இளைஞர் காங்கிரசினர் நின்றுகொண்டிருந்தனர். போலீசார் அவர்களைக் கைது செய்தனர்; சிலர் பதுங்கிவிட்டதாகத் தெரிகிறது.

கைது செய்தவர்களில் இருவர் மது அருந்தியிருந்தனர்; இருவரிடம் வங்கி ஆயுதம் இருந்தது. ஆக மொத்தம் ஆறு பேர்களை லாக்-அப்பில் வைத்திருக்கிறது போலீஸ்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 19—6—54 சனி

நிலைமை மாறுமா?

தற்காலம் போதிக்கப்பட்டு வரும் பல்வகை கல்வி முறைகளையும், புரட்சிகரமாக மாற்றி அமைக்க வேண்டுமென, கல்வி முறையைப் பற்றிய அரிச்சுவடி கற்றவர்களும் கல்லாதவர்களும், ஒரே முகமாகக் கூக்குரலிடுகின்றனர்.

பலவகையான தொழில் வளர்ச்சிக்கு ஏற்பாடு இல்லாமல், விவசாயத்தையே மூலத் தொழிலாக நம்பிக்கொண்டிருக்கிற ஒரு பொருளாதார ஏற்பாட்டில், இப்போது இருக்கிற கல்வி முறையை, தொழிற் கல்விமயமாக மாற்றி அமைத்து விட்டால், மக்கள் அனைவருக்கும் பிழைப்புக்கு மார்க்கம் கிடைத்துவிடும்; செல்வம் பெருக்கு ஏற்பட்டு விடும் எனப் பெருமிதமாகச் சிலர் கூறுகின்றனர்.

நமது 'தேசிய' பண்பாட்டிற்குகந்த கல்வி முறையை, எல்லாத் துறைகளிலும் புகுத்திவிட்டால், மக்களுக்குள்ள குறைபாடுகள் அனைத்தும், ஞாயிறைக் கண்ட பனி போல் மறைந்தொழியும் என, ஒப்பாரி வைக்கும் தேசோத்தாரகர்களும் உண்டு.

படித்தவர்களாயினும் சரி, படிப்பற்றவர்களாயினும் சரி, வேலை செய்யும் தேக திடம் படைத்தவர்களுக்கு, பிழைப்புக்கு வாய்ப்புக் கிடைப்பது என்பது பொருளியல் பிரச்னையைப் பற்றியதாகும். பெரும்பாலான மக்களுக்கு வேலை கிடைக்காமைக்கு, போதிய தொழில் வசதி இல்லாமையைத்தான் குறைகூற வேண்டுமே யல்லாது, குறைபாடு அனைத்தையும், கல்வி முறை மீதே ஏற்றிப் பேசுவது துளியும் பொருந்தாது. நாங்கள் படும் கல்வி எத்தகையதாக இருந்தபோதிலும், தொழில் துறையில், அதற்குரிய இடத்தை இரண்டாம் பட்சமாகத்தான் கொள்ளவேண்டும்.

இப்படி நாம் கூறுவதினால், இப்போதுள்ள கல்வி முறை அப்பழுக்கற்றது, அதில் மாற்றம் செய்ய வேண்டியது ஒன்றும் கிடையாது என நாம் எண்ணியிருப்பதாக எவரும் கொள்ளக்கூடாது. அதுவுமல்லாமல் தொழிற் கல்வி போதனை கூடாது என்பதுமல்ல நமது நோக்கம். நாட்டின் காணப்படும் வேலையின்மைக்கு, இப்பொழுதுள்ள கல்வி முறை மீது முழுப் பழியையும் போட்டு பேசுகிறவர்கள் பேச்சு, துளியும் உண்மையில்லையையும் உணர்ந்துகொண்டவர்கள் பேச்சாகாது என்பதை வலியுறுத்தவே மேற்குறிப்பிட்டவற்றை எடுத்துக் காட்டினோம்.

படித்தவர்—பட்டம் பெற்றுள்ளவர் உட்பட—வேலையில்லாமல் திண்டாடுவது ஒருபக்கம் இருக்க, உடலுழைப்பையே நம்பி வாழும் மக்களின் பெரும்பாலோர் வேலையின்றி தவிப்பதற்கு, எதைச் சமாதானமாகக் கொள்ளுவது—கூறுவது? கல்வி முறையில் கணிசமான மாற்றத்தைப் புகுத்துவதற்கும், படிப்பற்ற உடலுழைப்பாளிகள் பிழைக்க வழி தெரியாமல் திண்டாடுவதற்கும் ஏதாவது தொடர்பிருக்கிறதா என்பதைச் சிந்திக்க வேண்டும். படித்துப் பட்டம் பெற்றவர் வேலை பெறுவதும், படிக்காதவர் பிழைப்புத் தேடி அலைவதும், குறிப்பாக நாட்டில் தொழில் பெருக்கத்தைப் பொறுத்ததே யல்லாது, வெறும் கல்வி முறை ஒன்றை மட்டுமே பொறுத்ததல்ல என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

போதிய தொழில் பெருக்கம் காலாகாலத்தில் ஏற்படாத காரணத்தினால்தான், நாட்டின் பெரும்பாலான மக்கள் வறுமைக்கும் ஏனைய பிணிகளுக்கும் பலியாவதும் இருக்கின்றனவே யல்லாது, போதிக்கப்படும் கல்வி முறையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

பல தொழில் பயிற்சிக் கூடமாகக் கல்வி முறை முழுதையும், சிறுகச் சிறுக மாற்றி அமைக்க வேண்டுமென கல்வி நிபுணர்கள் கருத்தறிவிக்கின்றனர். இக்கருத்து வரவேற்கத் தகுந்ததேயாகும். தொழிற் கல்வி கற்றுத் தேறியவர்களை வேலைக்கமர்த்திக் கொள்ளும் வகையில், புதுப் புது தொழில் பெருக்கமும், இணைப்பாக ஏற்பட்டாக வேண்டும். அதற்கான வகையில் தொழில் பெருக்கத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேற்றப்பட வேண்டும்.

அனைவருக்கும் தொழிற் கல்வி மட்டும் போதிக்கப்பட்டு, அதற்கீடாக தொழில் பெருக்கம் ஏற்படாது இருந்தால், தொழில் பயிற்சி பெற்ற பலரும் வேலையின்றி தவிக்க வேண்டிய இழிநிலை தான் ஏற்படும்.

இப்பொழுதுள்ள கல்வி முறையை, தொழிற் கல்வி முறையாக மாற்றி அமைத்தாலும் கோரிய பயன் ஏற்படாது, ஏமாற்றமே அடைய நேரிடும். அப்பொழுதும் சில கோமாளிகள், தொழில் பயிற்சி பெற்றவர்களும் கும்பல் கும்பலாக வேலை கிடைக்காமல் வீதியில் அலைவதைக் கண்டால், அத்தகைய அவல நிலைக்கு உண்மையான காரணத்தை அறிந்துகொள்ள முடியாமலும், அறிந்துகொண்டாலும் அந்த உண்மையை வெளிப்படையாகக் கூற விருப்பமும் துணிவும் இல்லாமலும், அளிக்கப்படும் தொழில் கல்வியின்மீது பேர்தொடுக்க முன்வருவர். அதற்கான அறிகுறி இப்பொழுதே தெரியத் தொடங்கியும் இருக்கிறது,

இப்போதுள்ள கல்வி முறையின் கீழ் எழுதப் படிக்கக் கற்றவர்கள் தொகை நமது நாட்டில் மிகமிகக் குறைவானதாகும். இக் குறைவு, நகரங்களைக் காட்டிலும் சிற்றூர் மக்களிடம் கூடுதலாக இருக்கிறது. அங்குள்ள சமூக அமைப்பு, ஏதாவது ஒரு 'குடும்பத் தொழிலை' இளைஞர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் அமைந்திருப்பதாகும். இக்காலத்திலும், இவ்வேற்பாட்டில் குறிப்பிடத்தகுந்த மாறுதல் ஏற்பட்டு விடவில்லை.

எடுத்துக்காட்டாக கை நெசவாளியை எடுத்துக் கொள்ளுவோம். கை நெசவாளிக்கு எழுதப் படிக்கத் தெரிந்தாலும் தெரியாமற் போனாலும், நெசவுத் தொழிலை முதன்முதலாகக் கற்றவனாகவே இருக்கிறான். அவன் சுதந்திரமாகவோ, பிறரிடம் கூலி பெற்றோ, நெசவுத் தொழில் செய்து பிழைப்பதற்கு இயலாதவனாக இருக்கிறான்,

நெசவாளி பெற்றுள்ள தொழிற் கல்வி, சுதந்திரமாகத் தொழிலை மேற்கொள்ள அவனுக்குத் துணை செய்யவில்லை! பிறரிடம், தன் திறமையை கூலிக்கு விற்கவும் வாய்ப்பளிக்கவில்லை!

நெசவாளி, எழுதப் படிக்கத் தெரியாதவன் — ஆனால் கைத்தொழில் பயிற்சி பெற்றுள்ளவன்! கற்ற கைத்தொழில் அவனுக்குப் பிழைப்பைத் தரவில்லை! வறுமைக்கும் வேதனைக்கும் அவன் பலியாகிக் கிடக்கிறான்! என்ன காரணம், இந்த அலங்கோலத்திற்கு?

நெசவுத் தொழிலின் உள்ளது போலத்தான், மற்ற எல்லா குடிசைத் தொழில்களிலும் கேவல நிலை இருந்து வருகிறது. பலவகையான குடிசைத் தொழில்களில் நன்கு பயிற்சி பெற்றிருப்பவர்களும், படித்துப் பட்டம் பெற்றவர்களைப் போலத்தான் வேலையின்றி, அல்லல்படுகின்றனர்!

இந்த நிலைமையில் மறைந்து கிடக்கும் உண்மையைக் கண்டறிந்து, அது மற்றத் துறைகளிலும் புகுந்து அவைகளை சீரழிக்காமல் பாதுகாப்புத் தேடிக்கொண்டு, பல தொழில் கல்விப் பயிற்சியையும் ஒரே காலத்தில் நடைமுறைக்குக் கொண்டுவந்தால், கூடுமானவரை நல்ல பலன் கிடைக்கக் கூடும் என எதிர்பார்க்கலாம். அதை விடுத்து, கல்வித் துறையில் மட்டும் தொழில் பயிற்சிதரும் ஏற்பாட்டைப் புகுத்திவிடுவதால் மட்டுமே, படித்துப் பட்டம் பெற்றவரிடை இன்று காணப்படும் வேலையில்லா திண்டாட்டம்போல், பல தொழில் கல்வி பெற்றவரிடம் ஏற்படாது என எதிர்பார்ப்பது, முடிவில் பெரும் ஏமாற்றத்தையே அளிக்கும். அதனால் ஏற்படுகிற அதிர்ச்சி, இப்பொழுது ஏற்பட்டிருப்பதைக் காட்டிலும், பல மடங்குக் கூடுதலாக இருக்கும்!

டூனீஷிய மந்திரி சபை ராஜிநாமா!

பிரெஞ்சு ஆதிக்க நாடான டூனீஷியாவில் முதல் அமைச்சர் முகமது சாலே மசாலி தனது மந்திரி சபையின் இராஜிநாமாவை அளித்தார்.

பிரெஞ்சும் பண்ணைகளில் 2000 ஆயுதம் தாங்கிய கலகக்காரர்கள் கொள்ளையிட்டனர் என்று பிரெஞ்சு அதிகாரிகள் கூறினர்.

பம்பாயை உள்ளடக்கிய மகாராஷ்டிரம் வேண்டும்!

பண முதலைகள் எதிர்ப்பு பற்றி காட்கில் கருத்து

அகமதுநகர், ஜூன் 17—

"நாட்டின் முன்னேற்றத்துக்கு மொழிவாரிப் பிரிவினை அவசியமானதாகும்; கலாசார ஒற்றுமையுள்ள ராஜ்யங்களை உருவாக்கி அவைகளை முன்னேற்றப் பாதையில் செல்ல அனுமதிக்காவிட்டால் தேசத்தில் உள்ள ஜனநாயகக் கட்சிகள் வாளாயிருக்காது,"

—என்று அகமதுநகரில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் என். வி. காட்கில் கூறினார்.

ஹைதராபாத்தைப் பிரிப்பதும், பம்பாயை உள்ளடக்கிய சம்யுக்த மகாராஷ்டிர ராஜ்யம் அமைப்பதும் அவசியமென்று அவர் மேலும் கூறினார்.

மகாராஷ்டிரத்தில் பம்பாயைச் சேர்க்கக் கூடாது என்போர், அரசியல், பொருளாதாரத் துறைகளில் சுயநல நோக்குடைய சில முதலாளிகளேயாவர்; தங்கள் ஆதிக்கம் வளர வேண்டுமென்பதே அவர்கள் எதிர்ப்பின் நோக்கமேயன்றி, மக்களின் வளர்ச்சியல்ல," என்று காட்கில் கூறினார்.

"20 வருட காலம் ஆங்கிலம் இருக்க வேண்டும்"

தேசிய மொழி பற்றி குன்சுரு யோசனை

பூனா, ஜூன் 19—

"ஆங்கில மொழியின் மீது மேற்கொள்ளும் குறுகிய நோக்கமெதுவும், வருங்கால இளைஞர்களின் முன்னேற்றத்தையும், அவர்களின் அறிவு வளர்ச்சியையும் பாதிக்கும்," என்று எச். என். குன்சுரு எச்சரித்திருக்கிறார்.

மகாராஷ்டிர மகாஜன கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் எச். என். குன்சுரு, தாய்மொழியின் மூலம் கல்வி போதனை இருக்க வேண்டுமென்றும், ஆங்கிலம் கட்டாயமாக இருக்க வேண்டுமென்றும் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

'ஏராளமான மாணவர்கள் மேற்படிப்புக்காக மேலை நாடுகளுக்குச் செல்கின்றனர். இந்தியில் ஆங்கிலத்தில் போதிய பயிற்சி இல்லை என்றால், மேலை நாடுகளில் படிக்கச் செல்லும் இளைஞர்கள் எவ்வளவு தொல்லைப்படுவார்கள்? இக்காலத்தில் உயர்ந்த இலக்கியங்களைக் கொண்ட மொழி ஆங்கிலமேயாகும். நமது நாட்டு கல்விச் சாலைகளில் இன்னும் 20 ஆண்டு காலத்திற்கு ஆங்கிலம் இருக்க வேண்டும்."

"இந்தியோ அல்லது வேறு எந்த இந்திய மொழியோ ஆங்கிலத்திற்கு ஈடான வளமுடையதாக இல்லை. ஆங்கிலத்தைப் புறக்கணிக்கும் எண்ணம் இருபதாண்டு காலத்திற்கு மனதிலே தோன்றக்கூடாது."

செயற்கை மழை

பெரும் அளவில் வெற்றியளிக்கவில்லை

லண்டன், ஜூன் 19—

பொருளாதாரத் துறையில் சிக்கனமானது, லாபகரமானதாக இருக்குமளவில் செயற்கை மழை வெற்றியளிக்கவில்லை என்று பிரிட்டிஷ் சர்க்கார் நியமித்த குழு ஒன்று சர்க்காருக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறது.

இச் செய்தியை காமன்ஸ் சபையில் சர்க்கார் காரியதரிசி ஜார்ஜ் வார்டு தெரிவித்தார்.

இதுவரையில் நடைபெற்ற சோதனைகளின் முடிவும் நிச்சயமாக இன்னதென்று கூறும் அளவில் இல்லை.

எம்முறையிலும் பெரு மழையைப் பெய்விக்க விஞ்ஞானத்தில் இடமில்லை என்று அவர் மேலும் கூறினார்.

பதவி பெற்றால் மட்டும் போதாது

பொறுப்பேற்கவும் வேண்டும்!

சட்டசபைத் தலைவர்கள் மாநாட்டு முடிவு

"எந்த ஒரு சபையிலும், எதிர்க்கட்சித் தலைவர், தனித்த ஒரு பெரிய எதிர்க்கட்சியின் தலைவராகமட்டும் இருந்தால் போதாது—ஒரு மாற்று அரசாங்கத்தை உருவாக்கவும் ஆற்றல் உடையவராயிருக்க வேண்டும்"

என சட்டசபைகளின் தலைவர்கள் மாநாடு தீர்மானித்துள்ளது.

"சட்டசபைக்கு உள்ளும் புறமும், தங்களுக்கென இயக்கமும், ஒரு லட்சியமும் உடையவர்களாக இருக்க வேண்டும்—சட்டசபைக் கட்சி என அங்கீகரிக்கப்படுவதற்கு! அந்தக் கட்சியின் பலம், சபையின் 'கோரம்' எண்ணிக்கைக்குச் சமமானதாகவாவது, குறைந்தபட்சம் இருக்க வேண்டும்" என்றும் அந்த மாநாடு முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

புதுவை நெருக்கடி

மக்கள் சபையை உடனே கூட்டவும்

மாளவியா கோரிக்கை

போபால், ஜூன் 17—

புதுச்சேரியில் பிரெஞ்சு துருப்புகள் இறங்கியதால் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றி விவாதிக்க, இந்தியப் பாராளுமன்றத்தின் அவசரக் கூட்டமொன்றை உடனே கூட்ட வேண்டுமென்று மக்கள் சபை உறுப்பினர் சதுர்நாராயண் மாளவியா அறிக்கை ஒன்று விடுத்திருக்கிறார்.

நெல்லை மாவட்ட தி. மு. கழகம்

கந்தசாமி செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

மாநாட்டிற்கான வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது

முக்கூடல், ஜூன் 19—

தி. மு. கழகப் போதுச் செயலாளர் இட்ட கட்டளையை ஏற்றுத் துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்ட அறிக்கைக்கேற்ப, நெல்லை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் கூட்டம் முக்கூடலில் 13—6—54 ஞாயிறன்று பகல் 11-30 மணிக்குக் கூடிற்று கூட்டத்திற்குத் துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

உறுப்பினர்கள் அறுபது பேர்களில் 44 பேர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். வந்திருந்தோர் வருமாறு:—

தோழர்கள் செ. கா. முபூருப், ஜே. லோகநாத பாண்டியன், சி. சேதுராமலிங்கம், வேலாயுதம், துரைராசன், வி எம். ரங்கசாமி, அலிசேக் மன்சூர், மூ. ச. மணிமொழியன், ச. சினு, பி சேக்மாதார், சங்கரலிங்கம், கே சீனி, யாக்கோப், மு. இரத்தினசபாபதி, துரைசாமி, எ. அருணாசலம், இரா. பாண்டியன், இராசேந்திரன், கா. சுப்பையா, கே ஆர். அருமைத்தம்பி, சி. செல்லசாமி, கே சேர்மத்துரை, என். எம். மதுரையா, ஜெயபால், எம் இரத்தினம், பி. பரமசிவம், ஆறுமுகம், செல்லபாண்டியன், டி. குருசாமி, சு. கந்தசாமி, அரிய முத்து, கே எஸ். மணி, பெ. முத்துமாலை, தாமரைச்செல்வன், ஆ திராவிடமணி, துரைசாமி, செந்தில்வேல், முத்துக்குட்டி, திருமலைகுமார், அறவேந்தன், இராமநாதன், அப்பாதுரை, என். நடராசன், கலைஞர் என். பி. எம். அப்துல்காதர் ஆகியோராவர்

கடிதத்தின் மூலம் தங்கள் ஒப்புதலைக் கூட்டத்திற்கு அறிவித்தவர்கள் தோழர்கள் ஏரல் ஆழ்வார், எட்டையாபுரம் எஸ். கலிங்கன் ஆகிய இருவருமாவார்கள். சுமார் 37 பேர்கள் பார்வையாளராக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

கூட்டத் துவக்கத்தில் கூட்டத் தலைவர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூட்டம் சட்டப்படித் தலைமைக் கழகத்தால் கூட்டப்பட வேண்டி வந்ததின் அவசியத்தையும், நெருக்கடியையும் விளக்கி, வந்திருந்த உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

தலைமைக் கழகத்தின் துணைச் செயலாளர் அறிவித்திருந்தும், நேரில் அழைத்தும் மாவட்டச் செயலாளர் தோழர் ச. வீரபாகு கூட்டத்திற்கு வராதது குறித்து வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

தோழர்கள் முத்துக்குட்டியும், சு. கந்தசாமியும் மாவட்டக் குழுவைக் கூட்டியது சட்டத்திற்குப் புறம்பான செயல் என்று தலைவர் குறிப்பிட, அந்தத் தோழர்கள் இருவரும் தாங்கள் அறியாது செய்த செயலுக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டார்கள்.

பின்னர் தலைவர் அவர்கள், கழகத்தை நடத்திச் செல்லும் ஒழுங்கு முறைப் பற்றி விளக்கம் தந்துவிட்டு, உறுப்பினர்களை எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை கூறும்படி கேட்டுக்கொண்டார்.

19 தோழர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இறுதியில் 12 தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

மணப்பாறை குமரவேல் இயற்கை எய்தியது குறித்து அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

நெல்லை மாவட்டச் செயலாளராக இருந்து வந்த தோழர் ச. வீரபாகு அவர்களைச் செயலாற்றுவதினின்றும் நிறுத்தி வைப்பது (சஸ்பெண்ட் செய்து வைப்பது) என்ற தீர்மானமும், மாவட்டத் துணைச் செயலாளராக இருந்துவந்த தோழர் சு. கந்தசாமி அவர்களே இனிச் செயலாளர் பொறுப்பையும் ஏற்று நடத்த வேண்டும் என்ற தீர்மானமும், தூத்துக்குடி சதி வழக்கில் ஈடுபட்டுள்ள தோழர்கள் வெளிவந்துள்ள நிலையில் மாவட்ட மாநாட்டை நடத்திவிடுவது என்ற தீர்மானமும், மாநாட்டிற்கான வரவேற்புக் குழு அமைக்கும் தீர்மானமும் மிக முக்கியமான தீர்மானங்களாகும். இந்தத் தீர்மானங்களெல்லாம் மூன்றுக்கு இரண்டு பங்குக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தீர்மானித்துச் செல்லுபடி ஆக்கியவைகளாகும்.

நெல்லை மாவட்ட தி. மு. க. இரண்டாவது மாநாட்டைப் பாளையங்கோட்டையில், சமூக மாநாடு—அரசியல் மாநாடு என்று இரண்டு பகுதியாக நடத்துவது என்றும், மாவட்டக் கழக உறுப்பினர்களையே மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினர்களாகக் கொள்வது என்றும், தோழர்கள் எம். எஸ். சிவசாமி, சு. கந்தசாமி ஆகிய இருவரும் வரவேற்புக் குழுத் தலைவர்களாகவும், தோழர்கள் என். நடராசன், அலிசேக் மன்சூர் ஆகிய இருவரும் செயலாளர்களாகவும், தோழர்கள் திராவிடமணி, அப்துல் காதர் ஆகிய இருவரும் விளம்பர உறுப்பினர்களாகவும், மா. சண்முகம் தொண்டர் படைத் தலைவராகவும், தோழர் செல்லபாண்டியன் தொண்டர் படைத் துணைத் தலைவராகவும், தோழர் சூரியநாதன் பொருளாளராகவும் கொண்ட வரவேற்பு நிர்வாகக் குழு அமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டன.

மாவட்டச் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் மாலை 6 மணிக்கு இனிது முடிவுற்றது. (ந-நி)

★

'திராவிடம் தனியாகப் பிரிந்தால்தான் மக்கள் வளமாக வாழ முடியும்'

'காமராசரைப் பாராட்டுகிறோம்; ஆனால் ஆதரிக்கவில்லை'

முக்கூடலில் கழக வீரர்களின் முழக்கம்

முக்கூடல், ஜூன் 19—

இவ்வூரில் 13—6—54 காலை 11-30 மணிக்கு "கோடை இல்லத்தில்," நெல்லை மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது பகல் 2 மணிக்கு பகல் உணவு முடித்து, பின் 3 மணிக்கு ஆரம்பித்து மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. மேற்படி கமிட்டி கூட்டத்தில் 10 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★

பாண்டியன் படிப்பகம் திறப்பு விழா

மாலை 6-30 மணிக்கு அரியநாயகிபுரத்திற்கு தோழர்கள் நெடுஞ்செழியன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, அத்தக்குடி என். நடராசன், சிங்கை சு. கந்தசாமி ஆகியோர் சென்று "பாண்டியன் படிப்பக"த்தைத் திறந்து வைத்து, படிப்பகத்தின் முக்கியத்துவம் பற்றிப் பேசினர்.

★

பொதுக் கூட்டம்

இரவு 8 மணிக்கு முக்கூடலில் காஞ்சனா சினி டாக்கீசுக்கு வடபக்கமுள்ள திடலில் தோழர் என் இரத்தினவேல் பாண்டியன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள்: ஆ திராவிடமணி, அ. மீ. அலிசேக் மன்சூர், சிங்கை சு. கந்தசாமி, அத்தக்குடி என். நடராசன் ஆகியோர் காங்கிரஸ் ஆட்சியின் அநீதிகளைப் பற்றி விரிவுரையாற்றினர்.

தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி பேசுகையில் "ஆச்சாரியார் கொண்டுவந்த படுமோசமான ஆரம்பக் கல்வி திட்டத்தை, காமராசர், முதன் மந்திரியானவுடன் ஒழித்துக் கட்டிவிட்டார் என்ற காரணத்தினால் தான் அவரை நாங்கள் பாராட்டுகிறோம்; ஆனால், அவர் மந்திரி சபையை முழுக்க ஆதரிக்கவில்லை காமராசர், திராவிடநாடு பிரிவினைக்காகப் பாடுபட்டு விரைவில் பிரச்னையை முடிப்பாரேயானால் அவரை ஆதரிப்பது உறுதி" என்றார்.

பின்னர் தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் திராவிடநாட்டை விட மிகச் சிறிய ஜனத்தொகை கொண்ட நாடுகள் எல்லாம் தனியாகப் பிரிந்து வாழும்போது அதிக ஜனத்தொகை, அதிக பரப்பளவு ஆகியவைகளை உடைய "திராவிட நாடு" மட்டும் ஏன் பிரிந்து வாழ முடியாது என்று தகுந்த புள்ளி விவரங்களுடன் பேசினார். (ந-நி)

'டாக்டர் ஜாதி' எனத் தனி ஜாதியை சிருஷ்டிக்க முயற்சி!

பம்பாய் டாக்டரின் விசேஷ மருத்துவக் கல்லூரி கோரிக்கை

பம்பாய், ஜூன் 19—

"மருத்துவக் கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கப்படுவதற்கு, அவர்கள் இடைநிலை வகுப்பில் பெற்றுள்ள தேர்வு அம்சங்களை மட்டுமே கணக்கிலெடுத்துக் கொள்ளக் கூடாது; மாணவர்களின் இயற்கையான விருப்பம், சூழ்நிலைகள் மனோபாவம், தேகக் கூறு முதலியனவும் கவனிக்கப்படவேண்டும்."

இவ்வாறு அகில இந்திய மருத்துவக் கவுன்சில் தலைவர் டாக்டர் பி. என். பட்டேல் தெரிவித்தார்.

"மருத்துவர்களின் பிள்ளைகள், மற்றவரைக் காட்டிலும், தங்கள் சூழ்நிலையின் காரணமாக மருத்துவக் கல்வியை பொறுத்த வரையில் சில அனுகூலங்களைப் பெற்றிருக்கிறார்கள் என்ற தனது கருத்தை அவர் மேலும் விளக்கினார்.

மருத்துவர்களின் பிள்ளைகளுக்கெனத் தனி மருத்துவக் கல்லூரி ஒன்றை நிறுவலாம் என தான் வெளியிட்டிருந்த கருத்தைக் குறை கூறுபவர்களுக்கு விளக்கம் தரும் முறையில் அவர் குறிப்பிட்டதாவது:

"மருத்துவர்களின் பிள்ளைகள் சிலருக்கு, அவர்கள் தேவையான மார்க்குகளில் சிறிதுகுறைவாகப் பெற்றிருப்பதினால் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காது போய்விடுகிறது. அத்தகு நிலையில் மருத்துவர்களின் பிள்ளைகளுக்கு சற்று சலுகை காட்டலாம்" என்றார்.

பலுசிஸ்தான் நாடுகள்

ஒன்றாக இணைக்கப்படும்

பாக். சர்க்கார் முடிவு

காராச்சி, ஜூன் 17—

பிரிட்டிஷ் பலுசிஸ்தான் என்று முன்னர் அழைக்கப்பட்ட பலுசிஸ்தான் ராஜ்யத்தை பலுசிஸ்தான் ஸ்டேட் யூனியனுடன் இணைக்க முடிவு செய்துள்ளதாக பாகிஸ்தான் ராஜ்ய அமைச்சர் எம். ஏ குர்மானி குவெட்டாவில் கூறினார்.

இப்போது பலுசிஸ்தான், பாக். கவர்னர்-ஜெனரலின் நேரடி ஆட்சியில் இருக்கிறது.

கலாட், லஸ்பேலா. மாக்ரன், காரன் ஆகிய நாடுகளின் அதிபர்கள் நால்வரும் 'பலுசிஸ்தான் ஸ்டேட்ஸ் யூனியன்,' என்ற அமைப்பொன்றின் கீழ் இருக்கின்றனர். இந்த அமைப்புடன் பிரிட்டிஷ் பலுசிஸ்தானையும் சேர்க்க இருக்கின்றனர்.

மிளகாய் ஏற்றுமதி

சென்னை சர்க்கார் சிபார்சு

சென்னை, ஜூன் 16—

இலங்கைக்கும் மற்ற வெளிநாடுகளுக்கும் சென்னையிலிருந்து 1954 முதல் அரை ஆண்டில் 1000 டன் மிளகாய் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கும்படி சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்திருப்பதாக தென் இந்திய வர்த்தக சபைக்குத் தெரியவருகிறது.

சென்னை ராஜ்யத்தில் மிளகாய் விலை அதிகமாக இருந்ததால் சென்னையின் ஆலோசனையின் பேரில் மிளகாய் ஏற்றுமதிக்கு மத்திய சர்க்கார் தடை விதித்தனர்.

ஆண்டு ஒன்றுக்கு 2500, 3000 டன்கள் வரை வெளிநாடுகளுக்கு மிளகாய் ஏற்றுமதியாகிறது.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. மாநாடுகள்

ஜூன் மாதம் 26, 27-ந் தேதிகளில் வேலூர் டவுன் ஸ்டேஷனுக்கு எதிரில் 'அழகிரி பந்தல்' மூத்து அரங்கில் நடைபெறும்

26—6—54 சனி:	27—6—54 ஞாயிறு:
சமுதாய சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்: ஈழத்து அடிகள்	தலைவர்: கே. ஏ. மதியழகன்
திறப்பாளர்: இரா. நெடுஞ்செழியன்	திறப்பாளர்: நாஞ்சில் கி. மனோகரன்

இரு நாட்களிலும் தி. மு. கழகப் போதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும், முன்னணி வீரர்களும், திராவிட சட்ட சபை எம். எல். ஏ.-க்களும் கலந்துகொள்வர்

ஓவியக் கண்காட்சித் திறப்பாளர்: கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

இசை முரசு நாகூர் அனிபா குழுவினரின் இசை விருந்து இரு நாட்களிலும் நடைபெறும்

இரு நாட்களிலும் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிக்கும் 'அம்மையப்பன்,' 'சந்திரமோகன்' நாடகங்கள் நடைபெறும்

இரண்டு நாட்களுக்கும் கட்டணம் (நாடகங்கள் உட்பட): ரூ. 5, 3, 2, 1; பெண்களுக்கு அணா 8

—வரவேற்புக் குழுவினர்

உலக அரங்கில்

ஜெனீவா :
லாவோஸ், கம்போடியாவில் இன்னும் இருக்கக்கூடிய எந்த வியட்மின் படைகளும் உடனடியாக வாபஸ் பெறப்படும் என்று வியட்மின் ஜெனீவா மாநாட்டில் வாக்களித்தது.

• • •

சீனப் பிரதமர் சோ-என்-லாயும், ஆஸ்திரேலிய வெளிநாட்டிலாகா அமைச்சர் கேசியும் சந்தித்து முக்கால் மணி நேரத்துக்கு மேல் பேசிக்கொண்டிருந்தனர்.

★

ஆஸ்காட் :
குதிரைப் பந்தய மைதானத்தில் பிரிட்டிஷ் அரசி குடும்பத்தினர் குதிரை சவாரி செய்கையில், அரசியின் முன்னே பாதையில் அறுந்து தொங்கிய டெலிபோன் கம்பியில் அவர் தக்கிக் கீழே விழுந்துவிடாமல் அவரது கணவர் எடின்பரோ கோமகன் காப்பாற்றினார் என்று தெரிகிறது.

★

லண்டன் :
சீனாவுக்குச் செல்லும் தொழிற்கட்சித் தூதுக் குழுவின் தலைவர்கள் பீகிங் செல்லும் வழியில் மாஸ்கோவில் இரண்டு மணி நேரம் தங்குவார்கள் என்று தெரிகிறது.

★

ஒட்டாவா :
"அமெரிக்காவுக்குச் செல்லும் போது, சர்ச்சிலும், ஈடனும் கனடாவுக்கு விஜயம் செய்வார்கள் என்று கனடாப் பிரதமர் கூறினார்.

★

ஹாங்காங் :
1954-ம் ஆண்டு சீனாவின் வரவு – செலவுத் திட்டத்தில் 21 சதவீதம் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

* * *

சைனா இந்திய நட்புக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்திய கலைப் பொருள் கண்காட்சி ஒன்று ஹாங்காங்கில் திறக்கப்பட்டது.

★

பாரிஸ் :
பிரெஞ்சு தேசிய சட்டசபையின் பாதுகாப்புக் குழு ஐரோப்பிய இராணுவ ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது சென்ற வாரம், வெளிநாட்டிலாகா குழு இப்படி ஒரு முடிவைச் செய்தது.

★

கெய்ரோ :
தெற்கு ஏமென் பகுதியில் உள்ள ஆதிவாசிகளின் தலைவர்களை பிரிட்டன் பயமுறுத்துகிறது என்று அரபு லீக் பிரிட்டன் மீது குற்றம் சாட்டியது.

★

பெல்கிரேட் :
பசோனியாவில் பலத்த காற்றினாலும் மழையினாலும், 28 பேர் மரணமடைந்தார்கள் என்று தெரிகிறது. கிலக்கிச் சுரங்கமொன்றில் 16 பேர் அப்படியே மூழ்கிப் போனார்கள் என்று தெரிகிறது.

★

ஜெருசலம் :
சோவியத் அரசாங்கமும், இஸ்ரேலும் தங்களிடையே பூரண அதிகாரம் பெற்ற தூதுவர்களை அனுப்புவது என்று ஒப்புக்கொண்டன. இதுவரை இரு நாடுகளுக்கிடையே சாதாரண அதிகாரிகள் அனுப்பப்பட்டனர்.

★

சியோல் :
ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது 30 கோடி டாலர் அமெரிக்க உதவி தேவைப்படும் இராணுவ திட்டமொன்றை ஜெனரல் வான் பிளீட்டிடம் தென் கொரியா அளிக்கும். அது வுமின்றி, பொருளாதார சீரமைப்புக்காக 20 கோடி டாலர் கோரும் என்று தெரிகிறது.

★

யுனைடெட் நேஷன்ஸ் :
தாய்லாந்து எல்லையில் ஐ. நா. பார்வையாளர்களை அனுப்ப வேண்டுமென்ற கோரிக்கைக்கு ஐ. நா. பாதுகாப்பு சபையில் ரஷ்யா தனது ரத்து அதிகாரத்தை உபயோகித்து, கோரிக்கையை :தோல்வி அடையுமாறு செய்தது.

★

கொழும்பு :
இலங்கை சர்க்கார் வகுப்பு வாதத்தை அனுமதிக்காது என்று பிரதமர் கொத்தலாவல கூறினார். இந்தியர்களுக்கு எதிராகக் கிளம்பியுள்ள கோஷங்களைப் பற்றிக் கூறுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

★

தெஹ்ரான் :
ஈரான் பாராளுமன்றத்தின் இரகசியக் கூட்டமொன்றில் பிரதமர் சகேதி ஈரான் எண்ணெய்க் கிணறுகள் பற்றிய சமீபத்திய பேச்சு வார்த்தைகள் பற்றி எடுத்துச் சொன்னார் என்று தெரிகிறது.

★

தைப்பே :
8,207 டன் எடையுள்ள 'பிராசா' என்ற போலிஷ் கப்பல் ஒன்றை தேசியச் சீன அதிகாரிகள் பறிமுதல் செய்ததுடன், கப்பலின் காப்டன் உள்பட 11 பேருக்கு அரசியல் புகலிடம் அளித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அக்கப்பலில் இருந்த மற்றும் 18 போலந்து நாட்டவரும், 17 சீனர்களும் என்னவாயினர் என்று தெரியவில்லை.

★

குவாடிமாலா :
அமெரிக்க, ருஷ்ய ஆயுதங்கள் 'வாராகுட்'கள் மூலமாக குவாடிமாலாவில் போடப்படுகின்றன என்று குவாடிமாலா சர்க்கார் அறிவிக்கிறது.

★

சைகோன் :
இந்தோ-சீனாவிலிருந்த ஐந்து அமெரிக்க விமானத் தொழில் நிபுணர்களை வியட்மின் துருப்புகள் கடத்திச் சென்றுவிட்டனர்.

★

ஹனோய் :
சிவப்பு நதிச் சமவெளியில் பிரெஞ்சுப் படை 39 வியட்மின் கொரில்லாப் படையினரைக் கொன்று 30 பேரைச் சிறை பிடித்தனர் என்று தெரிகிறது.

★

ஹேக் :
குவாடிமாலாவுக்கு ஆயுதங்கள் கப்பலேற்றப்படுவதைத் தடுக்க வேண்டுமென்றும், அதுபோன்ற கப்பல்களைச் செல்ல அனுமதிக்கக்கூடாதென்ற அமெரிக்கக் கோரிக்கையையும் ஹாலந்து ஒப்புக்கொண்டது என்று தெரிகிறது.

★

கோலாலம்பூர் :
மலேயாவில் நெருக்கடி நிலைமைப் பிரகடனம் செய்து ஏழு ஆண்டுகளாகின்றன. இதுவரை கலகக்காரர்கள் 1,886 சர்க்கார் சிப்பாய்களையும், 2,307 சிவிலியன்களையும் கொன்றிருக்கின்றனராம். 680 பேர் காணப்படவில்லை என்று தெரிகிறது.

★

அம்மான் :
ஜோர்டனில் தனது நான்கு நாள் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு சவுதி அரேபிய மன்னர் தன் நாட்டுக்குப் புறப்பட்டார்.

செய்திக்கதிர்

உடன்பாடு
ரயில்வே தொழிலாளர்களின் குறைகளைத் தீர்க்க இந்திய ரயில்வே தொழிலாளர் தேசிய சம்மேளனப் பிரதிநிதிகளும், ரயில்வே அதிகாரிகளும் நேரில் சந்தித்துப் பேசுவதென்று உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக ரயில்வே தொழிலாளர் சம்மேளனத் தலைவர் பம்பாயில் கூறினார்.

★

சோதனை
ஷேக் அப்துல்லாவின் உறவினர் வீட்டை காஷ்மீர் விசேஷப் போலீசார் திடீரென சோதனை செய்து ஒரு சைக்ளோஸ்டைல் மிஷினையும், ஏராளமான சுவரொட்டிகளையும் கைப்பற்றினார்கள் என்று தெரிகிறது.

★

அரையணா டிக்கட்
செகந்திராபாத்துக்கும், ஹைதராபாத்துக்கும் இடையே விடப்படும் பஸ்களில் அரையணா டிக்கெட்முறை ஏற்படுத்த ஹைதராபாத் சர்க்கார் போக்குவரத்து இலாகா முடிவு செய்துள்ளது.

★

நம்பிக்கை
இந்த ஆண்டு முடிவிற்குள் கோவா முதலிய அன்னியத்திட்டுகள் விடுதலை பெற்றுவிடும் என்று தான் நம்புவதாக அசோக் மேத்தா கூறினார்.

★

வெள்ளம்
மேற்கு வங்க ஜல்பைகுரி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் 50,000 ஏக்கர் நெல் வயல்கள் மூழ்கியதோடு 10,000 பேர் வீடிழந்து தவிக்கின்றனர். டீஸ்டா என்ற நதி திசைமாறி ஓடியதே இதற்குக் காரணமாகும்.

★

சுய முயற்சி
தங்கள் முன்னேற்றத்துக்கு கிராம மக்கள் சுய முயற்சியில் வழி தேடிக்கொள்ள வேண்டுமென்று குன்றத்தூரில் மருத்துவ விடுதி ஒன்றுக்குக் கல் நாட்டுகையில் சென்னை முதல் அமைச்சர் காமராஜர் கூறினார்.

★

ஆதரவு
சென்னை சர்க்கார் போக்குவரத்து தொழிலாளர் சங்க சார்பில் ராயப்பேட்டையில் நடந்த பொதுக் கூட்டமொன்றில், காமராஜர் மந்திரி சபையை வரவேற்றும் அவருக்கு சங்கத்தின் பூரண ஒத்துழைப்பை அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

★

விசாரணை
கம்யூனிஸ்டுகளை ஒழிக்கும் நோக்கத்துடன், கிழக்கு வங்கத்தில் உள்ள 2 லட்சம் தொழிலாளர்கள் சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ள சோதனை பேர்டால் விசாரிக்கப்படுவர் என்று தெரிகிறது. ஆதம்ஜி மில்லுக்கும், கர்ணபுலி காகித மில்லுக்கும் தனி போர்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

★

உறுதியான முடிவு
காஷ்மீரிகள் துண்டு துண்டாக வெட்டி சிதைக்கப்பட்டாலும், இந்தியாவுடன் தாங்கள் சேர்ந்ததை மாற்ற அனுமதிக்க மாட்டார்கள் என்று பக்ஷி குலாம் முகம்மது கூறியுள்ளார்.

★

கண் ஆபரேஷன்
கண் ஆபரேஷனுக்கு பெங்களூர் சென்ற பிரகாசம், வைத்தியர்களின் ஆலோசனை பேரில் ஆபரேஷனை ஒத்திவைத்து விட்டார். அவர் சீக்கிரமே சென்னைக்குத் திரும்புவார் என்று தெரிகிறது.

கழகக் கூட்டங்கள்

★

மோவளியானூர்

பள்ளி முன்னிலையில்
21—6—54 மாலை 5 மணிக்கு
தலைவர் : எம். எஸ். ராமநாதன்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
பி. எம். குப்புசாமி

★

சி. முட்லூர்

22—6—54 மாலை 4 மணிக்கு
தலைவர் : தில்லை-வில்லாளன்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ
ஒளி

பழைய மாணவர் சங்கம் ஆண்டு விழா

அருப்புக்கோட்டை சைவபானு க்ஷத்திரிய உயர்நிலைப் பள்ளி பழைய மாணவர் சங்க ஆண்டு விழா 20—6—54 மாலை 6 மணிக்கு உயர்நிலைப் பள்ளி அரங்கில் தோழர் வி. கார்த்திகேயன தலைமையில் நடைபெறும். தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம, மீ. சு. இளமுருகு, தோழியர் பொற்செல்வி ஆகியோர் சொற்பெருக்காற்றுவர்.

சொற்பயிற்சி கூட்டங்கள்

20—6—54 காலை 10 மணிக்கு சென்னை, முத்தியாலுப்பேட்டை நெ. 17, சாலைவிநாயகர் கோயில தெரு, முத்தமிழ் மன்றத்தில, தோழர் கா. வி. இராதாகிருட்டிணன தலைமையில, 'பெண்ணுரிமை' எனும பொருள் பற்றி சொற பயிற்சி கூட்டம் நடைபெறும.

* * *

20—6—54 காலை 10 மணிக்கு 79, பா. வ. கோவில் தெரு, சென்னை 8-வது வட்ட தி. மு. கழக அலுவலகத்தில், தோழர் வி. சிவப்பிரகாசம், பி. ஏ., அவர்கள தலைமையில 'நமது லட்சியம' என்னும் பொருள் பறறி பலர் பேசுவர்.

சொற் பயிற்சி வகுப்பு

20—6—54 மாலை 6 மணிக்கு காரை தி. மு. கழகக் கட்டிடத்தில், அழகிரி சொற் பயிற்சி மன்றத்தின் சார்பில் தோழர் இரா ஜெயச்சந்திரன தலைமையில, 'பொருளாதாரத் துறையில் தி. மு. கழகம்' எனும் பொருள பற்றி சொற் பயிற்சி வகுப்பு நடைபெறும்.

ஏனங்குடியில் பொதுக்கூட்டம்

22—6—54 மாலை 5 மணிக்கு ஏனங்குடியில் புரட்சிக் கவிஞர் பூங்காவின் சார்பில் தோழர் என். எம். அனிபா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், என். அப்பாவு, எல். டி. இட்டப்பா ஆகியோர் பேசுவர்.

திருமணம்

21—6—54 திங்கள் காலை 6 மணி முதல் 7 மணிக்குள் சென்னை, வண்ணை, சர். தியாகராயர் கல்லூரியில் தோழியர் டாக்டர் என். தருமாம்பாள் பெயர்த்தி தோழியர் ஜி. என் மங்கையர்க்கரசிக்கும்—தோழர் அங்குசாமிக்கும், உயர்திரு பேராசிரியர் மயிலை சிவமுத்து தலைமையில் திருமணம் நடைபெறும். மாலை 5 மணிக்கு வரவேற்பும், எம். கே. தியாகராச பாகவதரின் இன்னிசையும் நடைபெறும்.

"முயற்சி"

திராவிட முற்போக்கு இதழ்

★

ஜுன் 15 முதல் திங்களிருமுறையாக வெளிவருகிறது. விற்பனையாளர்கள் தேவை அணுகுக:—
நிர்வாகி 'முயற்சி' அலுவலகம்,
27, ஆதிமூலம் பிள்ளை சந்து,
வடக்காவணிமூல வீதி, மதுரை.

தமிழரசுக் கழகப் போராட்டம்

காங்கிரஸ்காரர்கள் கலந்துகொள்ளக்கூடாது

தமிழ் நாடு காங். கமிட்டி முடிவு

ஜுலை 4-ந்தேதியன்று தமிழரசுக் கழகத் தலைவர் நடத்தப் போவதாக அறிவித்துள்ள போராட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று தமிழ் நாடு காங்கிரஸ், காங்கிரஸ்காரர்களுக்குத் தெரிவித்திருக்கிறது.

சென்னையில் நடைபெற்ற தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் எல்லைக் கமிஷன் நியமிக்கக் கோரி நடைபெற உள்ள அறிக்கை பற்றி விவாதிக்கப்பட்டபோதே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

எல்லைக் கமிஷன் சம்பந்தப்பட்ட கிளர்ச்சிகளில் காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்ளக்கூடாது என்ற தீர்மானமும் நிறைவேறியது.

திருத்தம்

வெளியூர் ஜுன் 16 'நம்நாடு' இதழில, 4-வது பக்கம் 4-ம்கலத்தில் 'ஓர் நினைப்பு' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியில் கடலூர் பழைய நகர் 2-வது வட்டாரக் கிளை தி. மு. கழகத் திறப்பு விழா ஜுன் 2-வது வாரத்தில் என்று இருப்பதை "ஜுலை 2-வது வாரத்தில்" என்று திருத்தி வாசித்துக் கொள்ளவேண்டுகிறோம்.

மதுபோதையில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தி. மு. கழகத் தோழர்களும் ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கின்றனர். போலீஸ் இலாகா, இளைஞர் காங்கிரஸ்மீது வழக்கு பதிவு செய்திருக்கிறது. கூடிய விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமெனத் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட இளைஞர் காங்கிரசைச் சேர்ந்தவர்களின் பெயர்கள் :—1. ராமசாமி (மதுரை); 2. வெள்ளைச்சாமி; 3. மாரியப்பன்; 4. ரெங்கசாமி; 5. உச்சிமாகாளி; 6. குருசாமி (வாலாமுட்டி) ஆகியோர்.

குறிப்பு:—இக்கலகம் நடந்த 6—6—54-ல் டால்மியாபுரம் ஸ்டேஷனுக்கு முன் ஏற்றப்பட்டிருந்த இலட்சியக் கொடியை இளைஞர் காங்கிரசினர் களவாடிய விவரம் 'நம் நாடு' ஏட்டில் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குசிக நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.